பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 23 புதன்கிழமை 07.07.2021 கதிர் 110

## மேலும் 322 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 322 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறியக் குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின்

2

# மக்கள் குறைகளைக் களைந்து சேவையாற்ற பஸில் தயாராம்!

## எம்.பியாக வர்த்தமானியில் பெயர் வந்த கையுடன் அவரே தெரிவிப்பு



**சிங்களம், தமிழ், முஸ்லிம் என மூவின மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களைத் தேடித் சென்று அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து சேவையாற்ற நான் தயாராக இருக்கின்றேன்.**

**-இவ்வாறு நாளை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

2

## எதிரணியுடன் இணைந்து ஆட்சியை கவிழ்க்க கூட்டமைப்பு உதவக் கூடாது

### அமைச்சர் சமல் ராஜபக்ஷ கோரிக்கை



வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும். ஆட்சியைக் கவிழ்க்க எத்தனிக்கும் எதிரணியினரின் சதி நடவடிக்கைகளுக்கு அவர்கள் துணைபோகக்கூடாது.

-இவ்வாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான அமைச்சர் சமல் ராஜபக்ஷ

2

## மாப்பிள்ளை தோழனுக்கு கொரோனா தொற்று; பொலிஸார் உட்பட 64 பேர் தனிமைப்படுத்தலில்

(இ.கலையமுதன்)

யாழ்., அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தரின் பதிவுத் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 38 குடும்பங்களைச் சுகாதரப் பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஜே - 276 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் குறித்த பதிவுத் திருமண நிகழ்வு நடைபெற்றது.

அந்நிலையில், மாப்பிள்ளை தோழனுக்கு (மணமகளின் சகோதரன்) கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் ,மணமக்கள்

2

## மேலும் 50 ஆயிரம் 'ஸ்புட்னிக் - வி' தடுப்பூசிகள் இன்று இலங்கைக்கு




ரஷ்யாவில் இருந்து மேலும் ஒருதொகை 'ஸ்புட்னிக் - வி' கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கை வந்தடைந்தன.

2

## இராணுவத்துக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளே வன்னி மக்களுக்கு

### வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் விளக்கம்



(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் அவர்களுக்குத் நேரடியாகக் கிடைக்கப்பெற்ற கொரோனாத் தடுப்பூசிகள் பொது

2

### ஒரு வாரமாகக் காணாமல்போன

# நெடுந்தீவு மீனவர் சடலமாக தமிழகக் கடற்கரையில் மீட்பு





(ந.லோகதயாளன்)

இம்மாதம் முதலாம் திகதி முதல் காணாமல்போன நெடுந்தீவு மீனவர், தமிழகம் வேதாரணியம் கடற்கரையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சில்வெஸ்ரர் மரியதாஸ் என்ற மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முற்பகல் 10 மணியளவில் நெடுந்தீவு கடற்கரையிலிருந்து கட்டுமரம்

2

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் 8 இற்கான விஞ்ஞான பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப்படவுள்ளது.**

## பெண்களை விற்கும் மேலும் 4 இணையத் தளங்கள் சிக்கின

### பொலிஸ் விசாரணை தீவிரம்

பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் நடவடிக்கைகளுக்காக 'ஒன்லைன்' மூலம் விற்பனை செய்யும் மேலும் நான்கு இணையத்தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2

## கதிர்காமத்தில் தமிழர் ஒருவர் சுட்டுக்கொலை

கதிர்காமம், நாகவீதி பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 52 வயதான தமிழர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றிரவு இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் காயமடைந்திருந்த நிலையில் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலைக்குச்

2

## Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

## மாப்பிள்ளை.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

குடும்பத்தினர் உள்ளிட்ட 38 குடும்பங்களில் 56 நபர்கள் சுகாதாரப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மணமகனுடன் கடமையாற்றும் 08 பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## பெண்களை......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இந்நிலையில், இது தொடர்பிலும், இவற்றின் பின்புலம் தொடர்பிலும் பல கோணங்களில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்கிஸையில் 15 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்ட சம்பவமானது இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனுடன் முக்கிய நபர்கள் சிலர் தொடர்புபட்டுள்ளமை கைதுகள் மூலம் தெரியவந்துள்ளன. எனவே, இச்சம்பவம் தொடர்பில் இன்னும் விசாரணைகள் தொடர்கின்றன.

இதன் அடிப்படையிலேயே மேலும் நான்கு இணையதளங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## நெடுந்தீவு......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஒன்றில் அவர் தொழிலுக்குச் சென்றுள்ளார். எனினும், அவர் கடந்த ஒரு வாரமாக கரை திரும் பவில்லை என்று குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அவரது சடலம் தமிழகம் வேதாரணியம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ள நிலையில் இன்று மீட்கப்பட்டுள்ளது.

இச் சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் இன்று கோடியாகரையில் புதைக்கப்பட்டது.



## இராணுவத்துக்கு....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தேற்றல் திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுவதாக, நான் குறிப்பிட்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இதன் உண்மை நிலையைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இரண்டாவது கட்டமாக தடுப்பூசிகள் வழங்குவதற்கு கடந்த 3ஆம் திகதி 50 ஆயிரம் சினோபோர்ம் தடுப்பூசிகள் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இரண்டாம் கட்டத் தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் இராணுவ மருத்துவக் குழுக்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் நேற்றுமுன்தினம் 5ஆம் திகதி முதல்நாளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 462 பேருக்கும், நேற்று 6ஆம் திகதி இரண்டாம் நாளில் 9 ஆயிரத்து 453 பேருக்குமாக முதல் இரண்டு நாள்களில் 18 ஆயிரத்து 915 பேருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் அம் மாவட்ட சுகாதார திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன. இதற்கான தடுப்பூசிகள் இராணுவத்தினருக்கே நேரடியாக வழங்கப்பட்டுள்ளன - என்றுள்ளது.

## மேலும் 322....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

எண்ணிக்கை 48 ஆயிரத்து 244ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் 41 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மேலும் 50.............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

விசேட விமானத்தின் மூலம் இன்று அதிகாலை 50 ஆயிரம் டோஸ் 'ஸ்புட்னிக் - வி' தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன என்று மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இவை விமான நிலையத்தில் இருந்து பாதுகாப்பாக இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு கட்டங்களாக 80 ஆயிரம் 'ஸ்புட்னிக் - வி' தடுப்பூசிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமத்தில்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கொண்டு செல்கின்றபோது இடைநடுவில் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

52 வயதுடைய சின்னத்தம்பி சிவபாலசுப்ரமணியம் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனிடையே, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் யால காட்டுப் பகுதிக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்றும், குறித்த நபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## எம்.பியாக............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பஸில் ராஜபக்ஷவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வர்த்தமானி மூலம் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டை அபிவிருத்தியிலும் பொருளாதாரத்திலும் முன்னோக்கிச் செல்ல உழைக்கின்றார்கள். அவர்கள் இருவரினதும் கைகளைப் பலப்படுத்தி மக்களின் பக்கம் நின்று சேவையாற்ற நான் விரும்புகின்றேன்.

எனக்கு எந்த அமைச்சுப் பதவியை வழங்குவது என ஜனாதிபதியும் பிரதமருமே தீர்மானம் எடுப்பார்கள். எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்க நான் தயாராக இருக்கின்றேன்.

மக்களின் அமோக ஆதரவுடன் நாட்டின் ஆட்சியைத் தீர்மானித்த கட்சியே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி. எனவே, கட்சி பிளவுபட ஒருபோதும் இடமளியேன். கட்சியை மென்மேலும் வலுப்படுத்துவேன்.

நாட்டின் நல்லிணக்கத்துக்காகத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட ஆளும் - எதிரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் நான் பேச்சு நடத்துவேன் - என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த கெட்டகொட, தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து வெற்றிடமான ஆசனத்துக்குப் பஸில் ராஜபக்ஷவின் பெயரைப் பரிந்துரைத்து அந்தக் கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று அறிவித்திருந்தது.

இதன்படி இன்று அவரின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினராக அறிவித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ நாளை சபாநாயகர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவருக்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிரணியுடன்........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்த்து வைப்பதில் ராஜபக்ஷ அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. என்னைப் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இதனை நான் தெரியப்படுத்தியிருக்கின்றேன். அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 16 தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி அண்மையில் நடத்தவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தாலேயே ஒத்திவைக்கப்பட்டது. அந்தச் சந்திப்பு விரைவில் நடைபெறும்.

தற்போதைய கொரோனா நிலைமையால் நாடு பொருளாதார ரீதியில் பல சவால்களைச் சந்தித்துள்ளது. இந்தச் சூழ்நிலையை எதிரணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். அரசுக்கு எதிராகவும் - அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் பொய்யான கருத்துக்களை எதிரணியினர் பரப்பி வருகின்றனர். எதிரணியினரின் இந்தக் கட்டுக்கதைகளை நாட்டு மக்கள் நம்பக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிரணியினரின் சுயநல அரசியலைக் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தமிழ் மக்களையும் நம்பவைத்து ஏமாற்றியது. இதனைத் தமிழ்த் தரப்பினர் மறக்கக்கூடாது - என்றார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## (அ)நீதி மறுசீரமைப்பு

இலங்கையின் நீதித்துறையில் கட்டமைப்பு ரீதியான பல மாற்றங்கள், சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று நேற்று நாடாளுமன்றத்தில் பெருமிதத்துடன் கூறியிருக்கின்றார் நீதி அமைச்சர் அலி சப்றி.

புதிய தொழிநுட்பங்கள், புதிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. அதனால் நாட்டின் நீதித்துறை மேம்படும் என்று குறிப்பிட்டு தமக்குத் தாமே மகுடம் சூட்டிக் கொண்டிருக்கின்றார் அவர்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இயங்கும் நீதிமன்றங்கள் போல இலங்கையின் நீதிமன்றங்களும் இயங்கும் என்பது அவரின் கனவாக உள்ளது.

இலங்கையில் 43 நீதிமன்றங்களில் ஒன்லைன் மூலம் விசாரணைகள் நடத்தவும், வழக்குகளைத் தாக்கல் செய்யவும், வீடியோ மற்றும் ஓடியோ மூலம் கலந்துரையாடவும் இந்த டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் வசதிசெய்யப்பட்டிருக்கும் என்று குறிப்பிடும் அவர், நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் 2023 இல் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளும் என்றும் உறுதி கூறியிருக்கின்றார்.

நாட்டின் நீதிமுறைமையை அடியோடு சீர்திருத்தி மாற்றியமைப்பது தொடர்பில் சுமார் இருநூறு சட்ட நிபுணர்களுடன் இணைந்து காரியமாற்றி வருகின்றோம். வர்தகச் சட்டங்கள், கிரிமினல் சட்டங்கள், சிவில் சட்டங்கள், முஸ்லிம் விவாகச்சட்டங்கள், பொது திருமணச் சட்டங்கள் போன்றவற்றில் மாற்றங்களைக் கொண்டு வர உத்தேசிக்கின்றோம். முக்கிய திருத்தங்களைக் கொண்டு வர வேண்டிய சுமார் இருபத்தைந்து பிரிவுகளை அடையாளம் கண்டிருக்கிறோம். – என்று தெரிவிக்கின்றார் நாட்டின் நீதி அமைச்சர்.

கொழும்பு ஹல்ஸ்டோர்பில் புதிதாக அமைக்கப்படும் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் ஐம்பது மேலதிக நீதிமன்றங்களும் அமையவிருக்கின்றன என்றும் அவர் கூறுகின்றார்.

இவை எல்லாம் நல்ல ஏற்பாடுகள்தாம். வரவேற்கத்தக்க முயற்சிகள்தாம்.

ஆனால் நாட்டின் நீதித்துறையின் ஆத்மார்த்தமான மனநிலையும் (Mindset) கூட சீர்திருத்தப்பட்டால்தான் உண்மை நீதி கிட்டும். நியாயம் நிலை நாட்டப்படும்.

தாங்கள் கொண்டு வரும் மாற்றங்களை நவீன தொழிநுட்ப ரீதியில் ஒப்பிட்டு நாடாளுமன்றத்தில் உறையாற்றியிருக்கின்றார் நீதி அமைச்சர்.

நீதிமன்றக் கட்டடங்கள் அமைத்தல், நவீன தொழிநுட்ப முறைகளை புகுத்தல் போன்றவை வன்பொருள் (Hardware) அபிவிருத்தி என்றும் –

புதிய சட்டங்கள் சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றமை மென்பொருள் (Software) அபிவிருத்தி என்றும் –

தமது சீர்திருத்த நடவடிக்கைத் திட்டங்களை சிலாகித்துப் பேசி தங்களுக்குத் தானே பாராட்டுரை நிகழ்த்தியிருக்கின்றார்.

அதற்குத் தகுந்த பதிலடியை நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

ஆம். வன்பொருள், மென்பொருள் எல்லாம் பொருத்தி விட்டீர்கள். ஆனால் உங்கள் கணனியே வேலை செய்யவில்லை. அதற்கு மின் இணைப்பு கூட வரவில்லை. அது எப்படி வேலை செய்யும்? – என்று நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருக்கின்றார் சுமந்திரன்.

தேசிய இனப்பிரச்சினை என்ற விடயம் நீதிமன்றங்களுக்கு முன்னால் வரும் போது இலங்கை நீதிமன்றங்கள் எப்படிச் செயற்படுகின்றன என்பது தொடர்பில் தமிழர்களுக்கு நல்ல – தாராளமான – பட்டறிவு உண்டு.

பயங்கரவாதச் தடைச் சட்டம் போன்றவை இந்த மண்ணில் எப்படி கையாளப்பட்டன என்பதைத் தமிழ் மக்கள் அறிவர்.

வடக்கு – கிழக்கு பிரிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்குப் போன்றவற்றில் நீதிமன்றங்களின் போக்குத் தொடர்பில் தமிழர்கள் திருப்தியடையவோ, நம்பிக்கை கொள்ளவோ முடியாது என்பதுதான் உண்மை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் வழக்குகளை திகதி போட்டு, திகதி போட்டே தள்ளிப் போட்டு, பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேல் இழுத்தடிப்பது ஒன்றே இந்த இலங்கை நீதித்துறையின் மன நிலையை அம்பலப்படுத்திக் காட்ட போதுமானதாகும்.

ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சரில் இருந்து இந்த விடயங்களையும் கவனிக்கும் நீதியரசர்கள், நீதிபதிகள், நீதிவான்கள், சட்டமாஅதிபர், அரச சட்டத்தரணிகள் வரை யாவருக்குமே தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும் என்ற விடயம் தெரியாததல்ல. ஆனால் அவர்கள் யாவருமே இத்தகையான தாமதிப்பு மூலமான நீதிமறுப்புப் பற்றி கவலைப்பட்டவர்களே அல்லர். அத்தகைய தரப்பினர் நீதி மறுசீரமைப்பு என்று கூறுவது வெறும் பித்தலாட்டம். கண்துடைப்பு. வெளிவேசம். அது உலகுக்கு நன்கு புரியும்.

# யாழ்.பழைய கச்சேரிக் கட்டடத்தை சீனாவுக்கு விற்கும் திட்டம் இல்லை

## பிரதமர் அலுவலகம் தகவல்



பழைய கச்சேரிக் கட்டடத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிய முடிகின்றது.

குறித்த இடத்தை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை இடம் பெறுவதாக அண்மையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார்.

மேலும் இதன் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக பிரதமரின் மீள்குடியேற்ற செயற்றிட்டத்துக்கான வடக்கு, கிழக்கு மாகாணத்தின் விசேட அதிகாரி கீதனாத் காசிலிங்கம் கருத்து தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்த குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொண்டன எனவும் இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை என்று அதிகாரிகளால் தனக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்

# வீட்டுக்குச் சென்று தூக்கி இழுத்துச்செல்லும் சம்பவங்கள் இந்த அரசில் இடம்பெறுகின்றன

## தலதா அத்துகோரல காட்டம்



வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் இப்போது இடம் பெறுவதில்லை என்பது உண்மையே, ஆனால் இந்த அரசாங்கத்தில் வீடுகளுக்கு நேரடியாகவே வந்து அடித்து, இழுத்து தூக்கிச் செல்லும் சம்பவங்களே இடம்பெறுகின்றன என முன்னாள் நீதி அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம், சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்ட மூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான ஒரு கட்டளை மற்றும் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பானபிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளையில், பிரபாகரனை சுட்டுக்கொன்று நாயைப் போல் இழுத்துவந்தது நினைவில் உள்ளதா என ஜனாதிபதி கேட்டார். இப்போது பிரபாகரனுக்கு நடந்ததுபோல் தான் நடக்குமென மேல்மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ஊடகவியலாளர் ஒருவரை பகிரங்கமாக மிரட்டுகின்றார். நாடு எங்கே செல்கின்றது.

வெள்ளை வான் பற்றி பேசுகின்றனர், இதற்கு முன்னர் ஊடகவியாலாளர்களுக்கு நடந்தது மீண்டும் இடம் பெறப்போகின்றதா எனகேள்வி எழுகின்றது. இவர்களின் கடந்த ஆட்சியில் கொலை மிரட்டல்களால் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அவ்வறான தொரு நிலைமை மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

காணாமல் போனோர் குறித்த காரியாலயம் அவசியமான ஒன்றாகும், இவர்களுக்குக் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் நாம் எதிர்ப்பை வெளிப்படுத்த மாட்டோம். ஆனால் இந்தக் காரியால தலைவர் சாலிய பீரிஸ் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு போட்டியிட்ட வேளையில் இந்த ஆட்சியில் சிலர் அவரை அவமதித்தனர். வடக்கு கிழக்கில் மக்களை மாத்திரம் இலக்கு வைத்து இந்தக் காரியாலம் உருவாக்கப்படவில்லை. 1983 ஆம் ஆண்டில் இருந்து தேடுவதற்கு இந்த காரியாலயம் உருவாக்கப்பட்டது. - என்றார்.

# தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்குக வலியுறுத்தி பூண்டுலோயா மக்கள் போராட்டம்

நுவரெவலியா - பூண்டுலோயா, டன்சினன் பகுதியைத் தொடர்ந்து தனிமைப்படுத்தி வைத்துள்ளமையைக் கண்டித்து அப்பிரதேச மக்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஒரு மாதத்துக்கு மேலாக எங்களது பிரதேசத்தை தனிமைப்படுத்தி வைத்துள்ளமையால், பாரிய அசௌகரியங்களுக்கும் பல்வேறு கஷ்டங்களுக்கும் முகம்கொடுத்துள்ளோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற உதவிகள் கூட எங்களுக்கு இதுவரைக் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ந்து எமது பகுதியை முடக்கி வைத்திருக்கின்றமையால் வாழ்வாதாரத்தை நடத்த முடியவில்லை. பொருளாதார நெருக்கடிக்கும் முகம்கொடுத்துள்ளோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே எமது பிரதேசத்தை தனிமைப்படுத்தல் பகுதியில் இருந்து உடனடியாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, சுகாதாரப் பிரிவு அதிகாரிகளிடம் கோரிக்கையை முன்வைத்து இறுதியில் ஆர்ப்பாட்டத்தை மக்கள் கைவிட்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## அதிகரிக்கும் கொரோனா


# பங்காளதேஷில் ஊரடங்கு மேலும் ஒரு வாரம் நீடிப்பு

அண்டை நாடான வங்காள தேசத்தில் கொரோனாப் பாதிப்பு தீவிரமாக இருந்து வருகிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கு கடந்த முதலாம் திகதிநாடுதழுவிய முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இந்த ஊரடங்கு நாளையுடன் முடிவடைய உள்ளது. இதற்கிடையே, அங்கு கொரோனாப் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அங்கு 11 ஆயிரத்து 525 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது. ஒரேநாளில் 163 பேர் கொரோனாவுக்கு பலியானார்கள்.



இதுவரை இல்லாத வகையில் தினசரி கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு புதிய உச் சத்தை எட்டியது முழு ஊரடங்கை நீட்டிக்க வேண்டியகட்டாயத்துக்குஅரசைக் கொண்டு சென்றது.

இந்நிலையில், நாளையுடன் முடிவடைய இருந்த நாடு தழுவிய முழு ஊரடங்கை வரும் 14 ஆம் திகதி வரை மேலும் 7 நாள்களுக்கு நீடித்து அரசு உத்தர விட்டுள்ளது.





## மாயமான ரஷ்ய விமானம்

# கடலில் விழுந்ததில் 28 பேர் மரணம்

நேற்றுக்காலை 28 பயணிகளுடன் புறப்பட்ட ரஷ்ய விமானம் கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

ரஷ்யா கிழக்குப் பகுதியில் கம்சாட்கா தீபகற்பம் அமைந்துள்ளது. இங்கிருந்து நேற்றுக் காலையில் 'அன்டோனாவ் ஆன்-26 ' ரக பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டது. இதில் 22 பயணிகளும் 6 விமான சிப்பந்திகளும் இருந்தனர்.

இந்த விமானம், பலானா நகரில் உள்ள விமான நிலையத்தில் தரை இறங்கத் தயார் ஆனது. அப்போது திடீர் என்று கட்டுப்பாட்டு அறையுடன் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அந்த விமானம் தரை இறங்கவில்லை. அதன் நிலை என்னவென்று தெரியாமல் மாயம் ஆனது. அந்த விமானத்தை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.ரஷ்ய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் தேடுதல் வேட்டையில் இறங்கின. பலமணி நேர தேடுதலுக்கு பிறகு மாயமான விமானத்தின் சில சிதைவுகள் விமான நிலையத் தில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. ஒரு சில பாகங்கள் தரையிலும், சில பாகங்க ளின் சிதைவுகள் கடலிலும் கண்டு பிடிக்கப்பட்டன. விமானத்தின் நிலை என்ன? அதில் பயணம் செய்த 28 பேரின் கதி என்ன? என்பது தெரியாமல் இருந்து வந்தது.

விமான நிலையத்தை சுற்றியுள்ள 25 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஓ கோட்ஸ் கடலை மையமாகக் கொண்டு தேடும் பணி நடந்தது.

தற்போது இந்த விமானம் கடலில் விழுந்ததாக தெரிய வந்துள்ளது. இதில் பயணம் செய்த 28 பேரும் நீரில் மூழ்கி இறந்து இருக்கலாம். யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் 1969 முதல் 1986 வரை தயாரிக்கப்பட்ட 'ஆன்-26 ' வகை விமானங்கள் சமீப காலமாக பல விபத்துகளில் சிக்கி உள்ளன. சமீப காலத்தில் இந்த ரக விமானங்களால் நடந்த 2 விபத்துகளில் பல பேர் உயிர் இழந்துள்ளனர். ரஷ்யாவில் 2019 மே மாதம் நடந்த ' கோய் சூப்பர் ' விமான விபத்தில் 41 பேர் உயிர் இழந்தனர். இப்போது மீண்டும் இந்த விமான விபத்து ஏற்பட்டு உள்ளது.

# டெல்டா வைரஸால் பைசர் தடுப்பூசியின் செயல்திறன் சற்று குறைந்துள்ளது

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் தடுப்பூசிகள் கண்டுபிடித்துள்ளன.

கடந்த ஆண்டு இறுதியில் இருந்து கொரோனா தடுப்பூசிகள் நடைமுறைக்கு வந்துள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன. இந்தியாவில் ஜனவரி 16ஆம் திகதியில் இருந்து தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் பைசர், மாடர்னா தடுப்பூசிகளை செலுத்த ஆர்வமாக உள்ளன.

இந்தியாவில் கொரோனா 2 ஆவது அலை மிகக்கொடூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இதற்கு உருமாறிய டெல்டா வைரஸ்தான் காரணம் என வல்லுநர்கள் கண்டறிந்தனர். இந்த வைரஸ் தற்போது உலகளவில் பெரும்பாலான நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் உருமாறுவதற்கு முன் பைஸர், மாடர்னா, ஜான்சன் அண்ட் ஜான்சன், இங்கிலாந்து ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழம்-அஸ்ட்ரா ஜெனெகா, கொவேக்சின், ஸ்புட்னிக் வி போன்ற தடுப்பூசிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக 95 சதவீதத்திற்கு மேல் செயல்திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டது. உருமாறிய வைரஸ்க்கு எதிராக அதே செயல்திறன் கொண்டதாக இருக்குமா? என்ற கேள்வி எழுந்தது. பெரும்பாலான நிறுவனங்கள் அதே செயல்திறன் கொண்டவையாக இருக்கும். இரண்டு டோஸ் தடுப்பூசிகள் செலுத்திய பின் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் மருத்துவமனையில் அனுதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை, உயிரிழப்போர் எண்ணிக்கை மிகமிக குறைவாக இருக்கும் என்றன. இந்த நிலையில் கொரோனா நோய் தொற்றில் இருந்து பைஸர் தடுப்பூசியால் பாதுகாக்கப்படும் மக்களின் சதவீதம் சற்று குறைந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள் ளது.

ஜூன் 6ஆம் தேதியில் இருந்து ஜூலை மாதம் தொடக்கம் வரை பைஸர் தடுப்பூசியால், தொற்றுக்கு எதிராக பாதுகாக்கப்பட்ட மக்களின் சதவீதம் 64 சதவீதமாகும். இந்த சதவீதம் இந்த காலக்கட்டத்திற்கு முன்னதாக 94 சதவீதமாக இருந்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. செயல்திறன் சற்று குறைந்தாலும் மக்களை கொரோனாவில் இருந்து பாதுகாப்பதில் சிறந்த தடுப்பு அரணாக பைஸர் இருப்பதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

94 சதவீதத்தில் இருந்து 64 சதவீதமாக குறைந்ததன் மூலம் இஸ்ரேல் நாட்டில் டெல்டா வைரஸ் பரவியுள்ளது என்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டெல்லா வைரஸ் முதன்முதலாக இந்தியாவில் கண்டறியப்பட்டது. அதன்பின் உலகின் பல்வேறு நாடுகளில் தென்பட்டது. ஐரோப்பிய நாடுகள் ஊரடங்கை தளர்த்தி, சகஜ நிலைக்கு திரும்ப நினைக்கும்போது, டெல்டா வைரஸ் ஊரடங்கு தளர்வுகள் குறித்து யோசிக்க வைத்துள்ளன. இஸ்ரேல் நாட்டில் தற்போது வரை 57 சதவீத மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.




# கின்னஸ் சாதனையில் இடம்பிடித்த உலகின் மிகப்பெரிய மணல் மாளிகை

உலகின் மிகப்பெரிய மணல் சிற்பமாக மாளிகை ஒன்று டென்மார்க் நாட்டின் புளோக்குஸ் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 21.16 மீற்றர் உயரமுடைய இந்த மணல் மாளிகை முந்தைய கின்னஸ் உலக சாதனையை முறியடித்து புதிய சாதனையாக இடம்பெற்றது. முன்னர் ஜேர்மனியின் மணல்மாளிகை 17.66 மீற்றர் உயரம் இருந்தது. இந்த மணல் மாளிகையின் கொள்கைவிளக்கம் கொரோனா விழிப்புணர்வாக வடிவம் பெற்றுள்ளது.

சுமார் 4.8 தொன்கள் மணல் பயன்படுத்தப்பட்டது. விழுந்துவிடாமல் இருக்க முக்கோண வடிவில் அமைக்கப்பட்டு மரத்தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.30 மணல் சிற்பிகள் இதன் மீதான உருவங்களை செதுக்கியுள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# மேகதாதுவில் அணை கட்டுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது

## முதலமைச்சர் எடியூரப்பா திட்டவட்டம்

மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு நிச்சயம் செயல்படுத்தும் என்று அந்த மாநில முதலமைச்சர் எடியூரப்பா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடகாவுக்கு சாதகமாக பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்தார். மேகதாதுவில் அணை கட்டுவது தொடர்பாக கர்நாடக மக்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம் என்றும் அத் திட்டம் நிச்சயமாக செயல்படுத்தப்படும் என்றும் எடியூரப்பா தெரிவித்தார்.

மேலும், சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு மேகதாது அணை கட்டப்படும் என்றும் இதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேகதாது அணைத் திட்டத்தை எதிர்க்க வேண்டாம் என்று தமிழ்நாட்டு முதலமைச்சரை நட்பு ரீதியில் கேட்டுக்கொண்டிருக்கிறேன் எனவும் எடியூரப்பா கூறினார்.

# மேகதாதுவில் அணை கட்ட அனுமதிக்க மாட்டோம் என மத்திய அமைச்சர் உறுதி

## தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவிப்பு

தமிழகத்தைக் கலந்தாலோசிக்காமல் மேகதாதுவில் அணை கட்ட அனுமதிக்கமாட்டோம் என்று மத்திய அமைச்சர் கொவத் உறுதியளித்துள்ளார் எனதமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் கொவத்தை, தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று சந்தித்துப் பேசியிருந்தார். பின்னர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் துரைமுருகன் பதில் கூறுகையில், "மார்கண்டேய நதியில் கர்நாடக அரசு அணை கட்டிய பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கஜேந்திர சிங் உறுதியளித்தார். மேலும், தமிழகத்தைக் கேட்காமல் மேகதாதுவில் அணை கட்ட அனுமதிக்கமாட்டோம் என்றும் அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார். கர்நாடக அரசு ஒப்புதல் வாங்கிவிட்டதால் மட்டும் மற்ற மாநிலத்தின் நலனுக்கு எதிராக அணை கட்டிவிட முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு தனியாக ஒரு நிரந்தரத் தலைவரை நியமிக்க வேண்டுமென கோரிக்கை முன்வைத்துள்ளோம். தென்பெண்ணை ஆற்றின் கிளை நதியான மார்க்கண்டேய நதியில் கர்நாடக அரசு தன்னிச்சையாக அணை கட்டியது குறித்தும் புகார் தெரிவித்துள்ளோம்.

காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற தமிழகத்திற்கு நிதி ஒதுக்கும்படியும் வலியுறுத்தினோம்.

தமிழகத்திற்கு மாதந்தோறும் கர்நாடகா அரசு தர வேண்டிய காவிரி நீரை திறந்து விட அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளோம். மொத்தத்தில் பேச்சு சுமூகமாக இருந்தது" என்று துரைமுருகன் கூறினார்.

# மற்றுமோர் கல்வித்துறைசார் நபர் பாலியல் புகாரில் கைது!



திருச்சி பிப் ஹீபர் கல்லூரிப் பேராசிரியர் போல் சந்திரமோகன் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவிகளுக்கு பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்தார் என எழுந்த புகாரையடுத்து ஸ்ரீரங்கம் மகளிர் காவல்நிலையம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர் மேற்கொண்ட புகாரின் பேரில் போல் சந்திரமோகன் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.



# தணிக்கைக்குப் பின்னரும் தடைசெய்யும் அதிகாரம் சட்டமூலம் தொடர்பாக டெல்லியில் ஆராய்வு

நாடுமுழுவதும் திரைத்துறையினர் மத்தியில் கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள ஒளிப்பதிவு திருத்த பிரேரணை குறித்து நாடாளுமன்ற நிலைக்குழு நேற்று டெல்லியில் ஆய்வு செய்திருக்கிறது.

தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்ட திரைப்படங்களை மீண்டும் ஆய்வு செய்து தணிக்கைச் சான்றிதழை ரத்துச் செய்யும் வகையில் புதிய சட்டத்திருத்தம் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கான பிரேரணை நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதன் மூலம் ஒரு திரைப்படத்தை மத்திய அரசு எப்போது வேண்டுமானாலும் தடை செய்ய முடியும். இந்த பிரேரணைக்கு திரைத்துறையினர் கடும் எதிர்ப் பினைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் புதிய பிரேரணை குறித்து தகவல் தொழில்நுட்பத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழு அதன் தலைவரும், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான சசிதரூர் தலைமையில் கூடி ஆலோசனை நடத்தியுள்ளது.

புதிய பிரேரணை குறித்து எழுந்துள்ள அச்சங்கள் குறித்து தகவல் ஒளிபரப்புத் துறை அதிகாரிகள் விளக்கம் அளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். புதிய பிரேரணை அமுலுக்கு வந்தால் மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்தின் செயல்பாட்டில் மாற்றங்கள் ஏற்படுமா என்பது குறித்து கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.




# முதல்வர் மம்தா பானர்ஜிக்கு ரூபா 5 லட்சம் அபராதம்

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜிக்கு ரூபா 5 லட்சம் அபராதம் விதித்து கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நந்திகிராமத்தில் பா.ஜ.க. வெற்றிபெற்றதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை, நீதிபதி கௌஷிக் சந்தா விசாரிக்க மம்தா எதிர்ப்பு தெரிவித்திருந்தார். நீதிபதி கௌஷிக் சந்தாவுக்கு பா.ஜ.க. தலைவர்களுடன் தொடர்பு இருப்பதாக மம்தா பானர்ஜி தரப்பு வழக்கறிஞர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே நீதித்துறையைத் தவறாகச் சித்தரிப்பதாக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான தீர்ப்பில், மம்தா பானர்ஜிக்கு ரூபா 5 லட்சம் அபராதம் விதித்து கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இனிமேலும், இவர் இத்தகைய குற்றச்சாட்டுக்களை நீதித்துறைமீது முன்வைத்தால் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளதோடு, கொரோனாவால் பாதிப்படைந்த வழக்கறிஞர்களின் குடும்பத்திற்கு இந்தத் தொகை வழங்கப்படும் என்றும் கொல்கத்தா நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது.

# பழம்பெரும் பாலிவுட் நடிகர் திலீப்குமார் காலமானார்!



பழம்பெரும் பாலிவுட் நடிகர் திலீப் குமார், மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் கடந்த மாதம் அனுமதிக்கப்பட்டார். மும்பையின் கர் பகுதியில் இருக்கும் ஹிந்துஜா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவருக்கு 98 வயதானதால், வயது மூப்பின் காரணமாக உடல்நலக் கோளாறு ஏற்பட்டதாக குடும்பத்தினர் தெரிவித்தனர். தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த திலீப்குமார் இன்று காலமானார். இந்தியத்திரையுலகின் மகத்தான நடிகர்களில் ஒருவரான திலீப் குமார், 1994 இல் தாதா சாகேப் பால்கே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்திய அரசின் பத்ம பூஷன், பத்ம விபூஷன் பட்டங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகருக்கான ஃபிலிம்ஃபேர் விருதுகளை அதிகமுறை வென்றுள்ளார். 1944 இல் நடிகராக அறிமுகமாகி, 50 ஆண்டுகளில் 65 படங்களில் நடித்துள்ளார்.

# எமது மக்களை ஏன் அச்சுறுத்துகின்றீர்கள்?

## நாடாளுமன்றில் சாணக்கியன் கேள்வி




நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் பொலிஸார் ஊடாக அச்சத்தினை விதைத்து எதனை சாதிக்கப்போகின்றீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், மடக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில பொலிஸார் எனது தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பது இல்லை. ஒரு நாடாளுமன்றஉறுப்பினரானஎனதுதொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பது இல்லை. அவ்வாறானவர்களின் பெயர்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. போதைப்பொருள் கடத்தல் குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களை விடுதலை செய்யுமாறு கோருவதற்காக அவர்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துவது இல்லை.

தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ்தமிழ் இளைஞர்கள்கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். காலை 9 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் 10 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் என அழைத்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக தற்போது இளைஞர்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். புனர்வாழ் வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுகின்றனர். அதேபோன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் வைத்து தமிழ் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். சிவில் உடையில் வரும் பொலிஸாரே இவ்வாறு கைது செய்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு அழைப்பினை ஏற்படுத்தினால் அவர்கள் அதற்கு பதிலளிப்பது இல்லை. அமைச்சர் சரத் வீரசேகர போன்றோரே அந்தச் சந்தர்ப்பங்களில் எங்களுக்கு உதவி செய்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனை பிரதேச சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் தோற்றுவிடுவோம் என்ற நிலையில் பிள்ளையானின் கட்சியினர் இருந்த போது, குழப்பத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டதன் பின்னரே பிள்ளையானின் கட்சியினைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவ்வாறுதான் மட்டக்களப்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் உள்ளன.

அதேபோன்று மட்டக்களப்பில் மண்கொள்ளையில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கான சோதனை நடவடிக்கையில் இரண்டு பொலிஸாரே ஈடுபட்டுள்ளனர். அதிகளவான டிப்பர் வாகனங்கள் மணல் ஏற்றிச் செல்லும் போது குறித்த இருவரினால் மாத்திரம் எவ்வாறு சோதனையில் ஈடுபட முடியும்.

அதேபோன்று மட்டக்களப்பில் ஒரு இடத்தில் ஒருவர் கஞ்சாபோதைப்பொருள்வைத்துள்ளார்எனபொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு நடந்தது என்ற போதைப்பொருள் வைத்திருந்தவர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தவரின் வீட்டிற்குச் சென்று சத்தம் போட்டுள்ளார். இதுதான் அங்கு நடக்கின்றது.

அண்மையில் இராஜாங்க அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். அதுகுறித்த விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என அறிந்து கொள்வதற்காக ஓ.ஐ.சிக்கு அழைப்பினை ஏற்படுத்தினேன். அவரின் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து, அவரிற்கு அடுத்த நிலையில் உள்ளவரின் தொலைபேசி இலக்கத்தினை வழங்கினர்.

நான் அவருக்கு பல தடவைகள் அழைப்பினை ஏற்படுத்தினேன். அதற்கு அவர் பதிலளிக்கவில்லை. மீண்டும் எனக்கு அவர் அழைப்பினை ஏற்படுத்தவும் இல்லை. இதுதான் மட்டக்களப்பு பொலிஸாரின் நிலையாக உள்ளது. எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியரான முதலாவது தமிழர்




தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக முதலாவது தமிழராக முகாமைத்துவபீட பீடாதிபதி கலாநிதி செல்வரெத்தினம் குணபாலன் தெரிவாகியுள்ளார்.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவைச்சேர்ந்த செல்வரெத்தினம் பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரான இவர் தற்சமயம் தம்பிலுவிலில் வாழ்ந்து வருகிறார்.

திருக்கோவில் பிராந்தியத்தின் முதலாவது பேராசிரியரான கலாநிதி செ.குணபாலன், விநாயகபுரத்தில் பிறந்து இந்த உயர்நிலையை அடைந்துள்ளமையையிட்டு பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துவருகின்றனர்.,

நேற்றையதினம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக தெரிவான ஐந்து பேரில் கலாநிதி குணபாலன் ஒருவராவார். பல்கலைக்கழகத்தில் 20 வருட விரிவுரையாளர் சேவையைக் கொண்டவர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீடத்தில் இரு தடவைகள் பீடாதிபதியாகக் கடமையாற்றிய கலாநிதி எஸ். குணபாலன், முகாமைத்துவப் பேராசிரியராக 12.12.2019 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால விரிவுரையாளர்களில் ஒருவராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## மட்டு .ஓட்டமாவடியில் சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு வீடுகள் கையளிப்பு

சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி சீட்டிழுப்பு நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் இன்று கையளிக்கப்பட்டன.

சமுர்த்தி சீட்டிழுப்பு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தில் மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

சமுர்த்தி சீட்டிழுப்பு நிதியுதவியின் கீழ் ஒரு வீட்டிற்கு தலா இரண்டு லட்சம் ரூபா செலவிலும் பயனாளிகளின் பங்களிப்புடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ள இவ் வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எம்.பாஸ்கரன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம்.சாஜஹான், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிரந்தர வீடில்லாத வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் வீடமைத்து கொடுக்கும் அரசின் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது

## திருகோணமலையில் தாதி ஒருவர் தீ மூட்டி தற்கொலை செய்ய முயற்சி

திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ஈச்சிலம்பற்று கொரோனா இடைத்தங்கல் முகாமில் கடமையாற்றி வந்த சேருநுவர– ஆர்,பி –3 பகுதியைச் சேர்ந்த ஜீ.ஏ.சீ.மனோகரி 37 வயது என தெரிவிக்கப்படுகின்றது.

கணவர் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்ற நிலையில் தீ மூட்டிக் கொண்ட தாதிய உத்தியோகத்தர் தற்பொழுது ஈச்சிலம்பற்று கொரோனா இடைத்தங்கல் முகாமில் கடமையாற்றி வருகிறார் எனவும் குடும்பத்தகராறு காரணமாகவே தனக்குத் தானே தீ மூட்டி கொண்டார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. குறித்த தாதிய உத்தியோகத்தர் சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

தீ மூட்டியமைக்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேலும் 50 ஆயிரம் தடுப்பூசிகள்




மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் மேலும் 50 ஆயிரம் சைனாபாா்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் கள பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.அச்சுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாம் கட்ட கொவிட் தடுப்பூசி வழங்கும் பணிகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் சுமார் 28 நிலையங்களில் நேற்றைய தினம் கொவிட் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதல் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.அச்சுதன் தெரிவித்தார்.

இதேநேரம் சுகாதாரப் பணியாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தினை முன்னெடுத்துள்ள நிலையிலும் நேற்றைய தினம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய தினம் 4,000இற்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசிகளைஏற்றியதைகாணமுடிந்தது.

தொடர்ச்சியாக இந்த தடுப்பூசிகள் ஏற்றும் செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளிலும்முன்னெடுக்கப்படவுள்ளன என பிரதிப்பணிப்பாளர் டாக்டர் மு.அச்சுதன் தெரிவித்தார்.

# கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத்தொடர்



## அரையிறுதியில் கொலம்பியாவை வீழ்த்தியது ஆர்ஜெண்டீனா

பிரெசிலியாவில் நடைபெற்ற கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி 1-1 என்று முழு நேர ஆட்டத்தில் சமநிலையில் முடிந்தநிலையில், பெனால்டிஷூட் அவுட்டில் ஆர்ஜெண்டினா 3-2 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கோபா அமெரிக்கா தொடரின் விதிமுறைகளின்படி இறுதிப் போட்டி சமனிலையானால் மட்டுமே கூடுதலான 30 நிமிடங்கள் அளிக்கப்படும். எனவே, இந்தப் போட்டியின் 90 நிமிட முழு நேர ஆட்டம் இருதரப்புக்கும் சமமாக 1-1 என்று முடிவடைய, போட்டி நேரடியாக பெனால்டி ஷூட் அவுட்டுக்குச் சென்றது.

இதில் ஆர்ஜெண்டீனா கோல் காப்பாளரான எமி மார்ட்டினெஸ் கொலம்பியாவின் 3 பெனால்டி அடிகளை லாவகமாகத் தடுத்து தனது அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்.

ஆட்டம் தொடங்கி ஏழாவது நிமிடத்தில் கோலடித்த லாவ்தரோ மார்ட்டினஸ், ஆர்ஜெண்டினாவின் கணக்கை ஆரம்பித்தார். இடைவேளையின் போது ஆர்ஜெண்டினா 1-0 என்று முன்னிலையிலிருந்தது. 61 ஆவது நிமிடத்தில், ஒரு கடினமான கோணத்திலிருந்து கொலம்பியா அணியின் வீரர் டியஸ் அடித்த பிரமாதமான கோல் 1-1 என்று போட்டியைச் சமநிலைப்படுத்தியது. முழுமையான நேரம் முடிவடைய ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட்டுக்குச் சென்றது.

அதில் கொலம்பியாவின் சான்சேஸ், எரி மினா, எட்வின் கார்டோனா ஆகியோரது அடிகளை ஆர்ஜெண்டீனா கோல் காப்பாளர் தடுக்க, அந்த அணி பெனால்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டியில் பிரேஷிலைச் சந்திக்கிறது.

# ஆயிரம் விக்கெட்டுக்கள் ஜேம்ஸ் அண்டர்சன்!



மன்செஸ்டரில் நடைபெற்ற லங்காயர்-கென்ட் அணிகளுக்கு இடையிலான கவுன்ட்டி கிரிக்கெட் போட்டியொன்றில் தன் ஆயிரமாவது விக்கெட்டை வீழ்த்தினார் இங்கிலாந்துப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன்.

அன்டர்சன் இதுவரை 617 டெஸ்ட் விக்கெட்டுக் களை எடுத்து உலகிலேயே அதிக டெஸ்ட் கிரிக்கெட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் புரிந்திருக்கிறார். 162 டெஸ்ட்களில் இவர் விளையாடியிருக்கின்ற மையும் ஒரு சாதனையாகும்.

தற்போது அனைத்துவகைக் கிரிக்கெட்டிலும் 1,000 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி மிகப்பெரிய சாதனையை அவர் படைத்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, ஒரு வேகப்பந்து வீச்சாளராக இத்தனை போட்டிகளில் ஆடியது பற்றி எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எனக்கே இது ஆச்சரியமாக இருக்கிறது, இன்னும் ஆடிக்கொண்டிருக்கிறேன் என்பது ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. என் உடல் களைப்படையவில்லை. வயதான அறிகுறியும் இல்லை.

டெஸ்ட் கிரிக்கெட் எனக்கு மிகவும் பிடித்த வடிவம். அதன் மீது எனக்கு தீராப்பற்று இருக்கிறது. இங்கிலாந்துக்காக டெஸ்ட் கிரிக்கெட் ஆடிக்கொண்டே யிருக்க வேண்டும். இதை நீண்ட நாள்களுக்கு என்னால் செய்ய முடிந்தது குறித்து மகிழ்ச்சியே என்றார்.



# ஆப்கானிஸ்தான் ரி-20 அணியின் தலைவராக ரஷீட் கான் நியமனம்

ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 14 வரை ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை மனதில் கொண்டு ஆப்கானிஸ்தான் ரி-20 அணியின் கப்டனாக ரஷீட் கான் நியமிக்கப்பட்டுள் ளார்.

ரி-20 கிரிக்கெட்டில் உலகம் முழுதும் அறிந்த புகழ் பெற்ற வீரர் ரஷீட் கான், தன் மாயாஜால ஸ்பின் பவுலிங்கினால் எதிரணி பேட்ஸ்மென்களை உலகம் நெடுக திணறடித்து வருகிறார்.

2019 இல் ஆப்கானிஸ்தானின் அனைத்துவகைக் கிரிக்கெட் அணிக ளுக்குமான தலைவராக நியமிக்கப்பட்ட ரஷீட் கான், தனக்கு தலைமைத்துவத் துக்கான அனுபவங்களில்லை என்று தன்னடக்கத்துடன் விலகிவிட்டார். மே.இ.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் மற் றும் ஒருநாள் தொடரை ஆப்கான் அணி இழந்ததுதான் அவரது விலகலுக்கான பிரதான காரணமாக அமைந்தது. அதையடுத்து அஷ்கர் அணியின் கப்ட னாக நியமிக்கப்பட்டார்

இப்போது, ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை மனதில் வைத்து, அவரை அணியின் தலைவராக ஆப் கானிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்தி ருக்கிறது. தொடரின் பிரிவு பி-யில் இடம்பெறும் 6 அணிகளில் இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் ஆகியன ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. தகுதிச் சுற்றில் விளையாடும் அணிகளிலிருந்து தெரிவாகும் இரு அணிகளும் இந்தக் குழுவில் இடம்பெறும்.

### யூரோ கிண்ணக் கால் பந்தாட்டத் தொடர்

## இறுதிக்குள் நுழைந்தது இத்தாலி



யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் முதல் அரையிறுதியில் இத்தாலி அணி ஸ்பெயின் அணியை பெனால்டி முறையில் 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்திருக்கிறது.

முழு நேர ஆட்டம் மேலதிய நேரத்தோடு 120 நிமிடங்கள் வரை சென்றும்கூட இரு அணிகளும் 1-1 என்று சமன் செய்த தால் முடிவு பெனால்டிக்குச் சென்றது.

முழு நேர ஆட்டத்தில் இடை வேளைக்கு பிறகு 60 ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் ஃபெட்ரிகோ கியசா கோல் அடிக்க, 80 ஆவது நிமிடத்தில் அல் வாரோ மொராட்டா ஒரு பிரமாதமான கோல் மூலம் ஸ்பெயின் அணியைச் சம நிலைக்குக் கொண்டுவந்தார். ஆனால், இதே அல்வாரோ மொராட்டா பெனால்டி ஷூட் அவுட்டில் அடித்த அடியை இத்தாலி கோல் காப்பாளர் தடுத்துவிட, ஸ்பெயின் அணி தோல்வி கண்டது. ஸ்பெயின் அணியின் பிரபல வீரர் அல்மோவும் தன் முதல் பெனால்டி அடியை தூக்கி வெளியே அடித்துச் சொதப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

யூரோ 2008 இறுதிப் போட்டியில் பெனால்ட்டியில்தான் இத்தாலி ஸ்பெயினிடம் தோற்றது. யூரோ 2012 இல் ஸ்பெயின் அணி அபார வெற்றி பெற்றது. 2016 யூரோவில் இறுதி 16 நொக் அவுட்டில் இத்தாலி அணி ஸ்பெயினை 2-0 என்ற கோல் கணக் கில் வென்றது.


இப்போது தொடர்ச்சியாக இரண்டாவது முறை நொக் அவுட்டில் ஸ்பெயினை வெளியேற்றியது இத்தாலி.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# டெல்டா வைரஸின் தாக்கம் இரு மாதத்தின் பின் தெரியும்

## அரச மருத்துவ அதிகாரி சங்கம் அறிக்கை




உலகின் அநேகமான நாடுகளில் கொவிட் – 19 வைரஸின் புதிய திரிவுகள் பரவ ஆரம்பித்து 2 – 3 மாதகாலத்தின் பின்னரே அதன் மோசமான தாக்கங்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. எனவே, தற்போது எமது நாட்டிலும் டெல்டா வைரஸ் திரிவுகள் இனங்காணப்பட்டுவரும் நிலையில், இருமாத காலத்தின் பின்னர் இதன் தாக்கங்கள் வெளிப்படத் தொடங்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியநிபுணர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி நாடு மிகமோசமான தொற்றுப் பரவல் நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும். அத்தோடு அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்கென ஒரு சீரான வழிமுறை உள்ளது. அதனைப்பின்பற்றாமல், உடனடியாகக் கொடுப்பனவு அதிகரிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த அரச சேவையிலும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டிருப்பதன் காரணமாக இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்திருக்கிறது. எதிர்வரும் காலங்களில் இது பாதகமான பல தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று வைத்தியநிபுணர்கள் எதிர்வு கூறியிருக்கும் நிலையில், இதுதொடர்பில் வினவியபோதே வைத்தியநிபுணர் வாசன் ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு –

### பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் இன்னமும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையேதொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்குக் காரணமாகும். அது மாத்திரமன்றி அண்மைக்காலத்தில் கொவிட் – 19 வைரஸின் திரிவான டெல்டா தொற்றுக்குள்ளான நபர்கள் திருகோணமலை உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களிலும் அடையாளங்காணப்பட்டு வருகின்றார்கள். எனினும் இவ்வாறான திரிவுகள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வசதி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மாத்திரமே காணப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களிலும் இந்த வசதிகளை ஏற்படுத்துமாறு நாம் வலியுறுத்தியிருந்தபோதிலும், இன்னும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### பி.சி.ஆர். பரிசோதனைகள் யாருக்கு மேற்கொள்ளப்படுகின்றன?

அடுத்ததாக தற்போது எந்தெந்த தரப்பினருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது பற்றிய தகவல்கள் உரியவாறு வெளிப்படுத்தப்படுவதில்லை. முன்னர் தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்புகளைப் பேணியவர்கள், தொற்றிலிருந்து குணமடைந்து வீடுதிரும்பும் நோயாளர்கள் மற்றும் எழுந்தமான அடிப்படையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. ஆனால் தற்போது எவ்வடிப்படையில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல்கள் வெளியிடப்படாத காரணத்தால், தொற்றின் வீரியத்தை மதிப்பீடு செய்வதும் கடினமானதாக மாறியிருக்கின்றது. ஆகவே முதலில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் அவை எந்தெந்தத் தரப் பினருக்கு மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல்களையும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### தொழிற்சங்க நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது

மேலும் நாடு மிகமோசமான தொற்றுப்பரவல் நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும். குறிப்பாக வைத்தியர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு சுமார் இருவருடங்களுக்கு முன்னர் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் வைத்தியர்களுக்கு அந்தக் கொடுப்பனவு இப்போதுவரை வழங்கப்படவில்லை. எனவே, அந்தக் கொடுப்பனவை வழங்குமாறுகோரி வைத்தியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடமுடியும். ஆனால் தற்போதைய நெருக்கடி நிலையில் மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கத்திடம் போதியளவான நிதி இல்லை என்பதை நாம் புரிந்துகொண்டிருக்கின்றோம். அதுமாத்திரமன்றி அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்கென ஒரு சீரான வழிமுறை உள்ளது. அதனைப் பின்பற்றாமல், உடனடியாகக் கொடுப்பனவு அதிகரிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த அரசசேவையிலும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

### சுகாதார வழிகாட்டல்கள் இறுக்கமாகப் பின்பற்றப்படவில்லை

அடுத்ததாக அரசாங்கத்தால் புதிய சுகாதாரப் பாதுகாப்புவழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் வணக்கஸ்தலங்களுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படாதபோதிலும், ஸ்பா போன்றவற்றைத் திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான வழிகாட்டல்களை வெளியிடும்போது உரியவாறு பகுப்பாய்வுசெய்து ஒன்றுக்கொன்று முரணற்றவகையிலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய விதத்திலும் வெளியிடுவது அவசியமாகும். அது மாத்திரமன்றி சுகாதாரப்பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தாலும், அவை உரியவாறு இறுக்கமாகப் பின்பற்றப்படாமையை அவதானிக்கமுடிகின்றது.

### டெல்டா வைரஸின் மோசமான தாக்கங்கள் இருமாதங்களில் வெளிப்படும்

உலகின் அநேகமான நாடுகளில் கொவிட் – 19 வைரஸின் புதிய திரிவுகள் பரவ ஆரம்பித்து 2 – 3 மாதகாலத்தின் பின்னரே அதன் மோசமான தாக்கங்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. எனவே தற்போது எமது நாட்டிலும் டெல்டா வைரஸ் திரிவுகள் இனங்காணப்பட்டுவரும் நிலையில், இருமாதகாலத்தின் பின்னர் இதன் தாக்கங்கள் வெளிப்படத்தொடங்கும். ஆகவே இவ்வனைத்து விடயங்களையும் மனதிலிருத்தி, பொதுமக்கள் உரிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

# மின்னியலாளருக்கு தொழிற்தகைமைச் சான்றிதழ் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை

45 ஆயிரம் மின்னியலாளர்களுக்கு தொழிற் தகைமைச் சான்றிதழை இலவசமாகவழங்கபொதுபயன்பாடுகள், யுஎஸ் எயிட் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையிலுள்ள இளைஞர்களின் தொழில் ரீதியான ஊக்குவிப்பை அதிகரிக்கும் விதமாக நாடளாவிய ரீதியில் 45 ஆயிரம் மின்னியலாளர்களுக்கு இலவசமாக என்.வி.கியு–3 தொழிற்தகைமையை வழங்க துரித திட்டமாக இது கருதப்படுகிறது.

இளைஞர்களின் வேலையின்மை பிரச்சினையை சமாளிக்கும் நோக்கில் இளம் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற் கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

45 ஆயிரம் மின்னியலாளர்களுக்கு தொழில்முறை தகுதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யுஎஸ்எயிட்–இன் இளைஞர் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் திட்டமான யூலீட் உடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மின்சாரத்துறையில் இலங்கை இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் மின்சாரத்துறையின் ஒழுங்குறுத்துநர் என்ற வகையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும்மிகபாரியதிட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இதன் மூலம் இளம் மின்னியலாளர்கள் எவ்வித செலவுமின்றி தொழில்முறைதகுதியைபெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க் தெரிவித்தார்.

மேலும் இந்தத் திட்டத்தின் ஊடாக இளம் மின்னியலாளர்கள் மூன்றாம் நிலை தேசிய தொழில் தகைமைச் சான்றிதழை (என்.வி.கியு–3) பெற்றுக் கொள்வதன் மூலம் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் தொழில் வாய்ப்பு களைப் பெறுகின்றமை மாத்திரமன்றி, சிறந்த தொழில் அங்கீகாரத்தைப் பெற முடியும் என்றும் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் தொழிற்கல்வியை ஊக்குவிப்பதே யூலீட் திட்டத்தின் நோக்கமாகும் என யூலீட் திட்டத்தின் கூட்டுப் பணிப்பாளர் விந்தியா சில்வா குறிப்பிட்டார்.

அனுபவம் வாய்ந்த மின்னியலாளர்களுக்கு தொழில்முறைத் தகுதியை வழங்கி மின்னியல் துறையை நிபுணத்துவம் மிக்க துறையாக மாற்றுவது மாத்திரமன்றி, தகுதிபெற்ற மின்னியலாளர்களைக் கொண்டு பாதுகாப்பான மின்சார நிறுவல்களை மேற்கொள்வதன் மூலம்வாழ்க்கையையும்,சொத்துக்களையும் பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும் என விந்தியா சில்வா மேலும் தெரிவித்தார். இலங்கையில் சுமார் 45 ஆயிரம் மின்னியலாளர்கள் காணப்படுகின்றனர் என்றும் அவர்களில் 80 வீதமானோருக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை தகுதி இல்லை என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது, இது அவர்களின் தொழில் முன்னேற்றத்துக்குப் பாரியதொரு தடையாகும். அத்துடன் மின்னியலாளர்களுக்கான உரிமம் பெறுவதற்கான குறைந்த பட்சதகுதியாக என்.வி.கியு–3 நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இதனைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாகும். ஆனால் தங்களது வருமானத்தைக் கருத்திற் கொண்டு பலர் பாரிய தொகையை முதலீடுசெய்து நீண்டகாலகற்கைநெறிகளை மேற்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர்.

எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக மூன்றே தினங்களில் மின்னியலாளர்களுக்கு என்.வி.கியு.–3 சான்றிதழை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது. யூலீட் என்பது இளைஞர்களின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இலங்கையில் யுஎஸ்எயிட் நிதியுதவி அளிக்கும் ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தினூடாக மாணவர்கள், ஆசிரியர்கள், நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோருக்கு ஒத்துழைப்பு நல்கி பலப்படுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யுஎஸ்எயிட்–ஆனது 60 ஆண்டு காலங்களாக உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவிகளை நல்கிவருகின்றது. அத்துடன் இலங்கை மக்களின் நலனுக்காக 1956 ஆம் ஆண்டு முதல் 35,000 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விவரங்களுக்கு:– பெருநிறுவன தொடர்பாடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் அனுஷிகா கம்புறுகமுவவைத் (0718622800) தொடர்பு கொள்ளவும்.

# வெளிநாடுகளில் வாழ்கின்ற சிங்களவர்களுக்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் அச்சுறுத்தல்

## தயாசிறியின் கண்டுபிடிப்பு



புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து செய்யும் பொய்ப் பிரசாரங்கள் காரணமாக அந்தந்த நாடுகளில் வாழும் சிங்க ளவர்களுக்கு அச்சுறுத்தல் நிலை யொன்று உருவாகியுள்ளதாகவும், இலங்கையில் இனப்படுகொலை இடம் பெற்றதாக கூறும் பொய் ப் பிரசாரங்களை நிறுத்த அரசாங்கம் தலையிட்டு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச் சர் தயாசிறி ஜெயசேகர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம், சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக் கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்ட மூலம், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பா டுகள்) சட்டத்தின் கீழான ஒரு கட்டளை மற்றும் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப் பனவுகளை அதிகரிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்–

நாடாக நாம் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். சர்வதேச ரீதியிலும் நாட்டுக்கு எதிராகவும், அரசாங்கத்துக்கு எதிராகவும் பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. எமது கொள்கை, பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு எதிராகப் பல நாடுகள் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக சீனாவுடன் நாம் ஏற்படுத்திக்கொண்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் காரணமாக பல்வேறு நாடுகள் எம்மை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன.

இது வெவ்வேறு நாடுகள் ஒன்றிணைந்து எமக்கு எதிராகச் செய்யும் வேலைத்திட்டமாகும். ஆனால் இதற்காக நாம் எந்த நாட்டுடனும் முரண்படாது அவர்களுடன் பேச்சு நடத்தி அவர்களின் நோக்கங்களை விளங்கிக்கொண்டு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு கூறும் விடயங்களை புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் இந்தக் காரணிகளைக் கையில் எடுத்துக்கொண்டு அதில் அவர்கள் எவ்வாறு வாழ்கின்றனர், பின்னர் எமக்கு எதிராக எவ்வாறு செயற்படுகின்றனர் என்பது தொடர்பாக நாம் கவனம் செலுத்தாது உள்ளோம் என்றே நினைக்கின்றேன். இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் மிகப் பெரிய இனப்படுகொலை இடம் பெற்றதாகவும், அதில் தமிழ் மக்களுக்கு பாரிய அழிவு ஏற்பட்டது, 40 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றெல்லாம் சர்வதேச புலம்பெயர் அமைப்புகள் பிரசாரம் செய்துகொண்டுள்ளன. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அடித்தளம் போட்டு வருகின்றது. கூட்டமைப்பினர் இங்கு பேசுவதை கொண்டே பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மூன்று லட்சம் மக்கள் நெருக்கடி நிலையில் இருந்து இராணுவத்தினால் காப்பாற்றப்பட்டனர். இந்த மூன்று லட்சம் மக்களையும் கொன்று குவித்திருந்தால் இவர்கள் கூறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் இராணுவம் இவர்களைக் காப்பாற்றியது. இப்போது கனடாவில் இனப்படுகொலை வாரம் என அனுஷ்டிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் அடுத்த பரம்பரை தமிழ் மக்கள் இலங்கையில் அடக்குமுறை இடம் பெறுவதாக நினைப்பார்கள். எனவே, இவ்வாறான நடவடிக்கை களை அரசாங்கம் நிறுத்தும் நடவடிக் கைகள் முன்னெடுக்க வேண்டும். தமிழ் அமைப்புகளின் இந்தச் செயற்பாடுகள் காரணமாக அங்கு வாழும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் நிலையே உருவாகியுள்ளது. இது கனடாவில் மட்டுமல்ல, தமிழ் புலம்பெயர் அமைப்புகள் இருக்கும் சகல இடங்களிலும் இவ்வாறான செயற்படுகள் இடம்பெற்றால் அங்கு வாழும் சிங்கள மக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் நிலையொன்று உருவாகும். எனவே இதனை நிறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எம்மை நெருக்கடிக்குள் தள்ளி, அவர்களுக்கு ஏற்றவகையில் இலங்கையில் ஆட்சிமுறை ஒன்றை உருவாக்கிக்கொள்ளும் வேலைத்திட்டமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் நாடாக சுயாதீனமாக பயணிக்க முடியாது போகின்றது. மனித உரிமை மீறல்கள் என்ற பெயரில் இலங்கையர் நாட்டை விட்டு வெளியில் சென்றால் கைது செய்ய முடியும். இவ்வாறான சம்பவங்கள் இதற்கு முன்னர் பல நாடுகளில் இடம்பெற்றுள்ளன. ஆகவே ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து நாம் இப்போது பேசிக்கொண்டுள்ளோம். முன்னைய ஆட்சியிலும் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஆனால் அது நாட்டின் நலனுடன் தொடர்புபட்டதாக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.



## தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறிக் கொழும்பில் போராட்டம்

பல கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் சேவை சங்கத்தினர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் பிரதான காரியாலயத்தின் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இருவர் காரியாலயத்தின் தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீதேறி போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி

அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொவிட் தடுப்பூசி செலுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி செலுத்தி முடிக்க எதிர்ப்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடகடல் நிறுவனத்தின் உற்பத்திகள் விஸ்தரிப்பு



விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியவற்றுக்குத் தேவையான வலைகளை முழுமையாக விநியோகிக்கும் வகையில் லுணுகல வலை உற்பத்தி தொழிற்சாலையின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நோத்சீ எனப்படும் வடகடல் நிறுவனத்தின் லுணுவில வலை உற்பத்தித் தொழிற்சாலையின் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில், லுணுவில வலை உற்பத்தித் தொழிற்சாலையில் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இதன்போது, கொவிட் பரவல் காரணமாக சீரான இறுக்குமதிகள் இன்மையால் தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பாகக் கடற்றொழில் அமைச்சரிடம் எடுத்துக் கூறிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், கொவிட் காரணமாக வேலைநேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையால் மாதாந்தம் சுமார் 15 தொன் வரையில் மேற்கொள்ளப்பட்ட வலை உற்பத்திகள் தற்போது 7 தொன்களாக வீழ்ச்சியடைந்துள்ளன எனத் தெரிவித்தனர்.

அத்துடன், கடற்றொழில் அமைச்சால் கொள்வனவு செய்யப்படுகின்ற வலைகள் தமது நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், கிரிக்கெட் வலைப் பயிற்சிகள் உட்பட பல்வேறு தேவைகளுக்காக விளையாட்டுத் துறை அமைச்சால் வருடந்தோறும் பெருமளவான வலைகள் கொள்வனவு செய்யப்படுகின்றமையால், அவற்றைத் தமது உற்பத்தித் தொழிற்சாலையில் இருந்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

தொழிற் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட கடற்றொழில் அமைச்சர், சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி மூலப் பொருள்களை சீராகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகளை மேற்கொண்டு தருகிறேன் எனத் தெரிவித்தார்.

அத்துடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்பத்திப் பணிகளை விரைவுபடுத்துமாறும், கடற்றொழில் அமைச்சு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு ஆகியவற்றுக்கான வலைத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடகடல் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

வடகடல் நிறுவனத்தின் தலைவர் திசைவீரசிங்கம் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்கா மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் பணியாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் நிர்வாக ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2021இல் வெளியிடப்பெற்றது.